பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 09 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- தமிழகத்தில் தஞ்சாவூர் - சோழபுரம் நான்குவழி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை .மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி இன்று நேரில் ஆய்வு செய்கிறார்.
- தில்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் இன்று ஜாமீன் வழங்கியுள்ளது.
- தமிழகத்தின் ஓசூரில் மின்னணு மற்றும் டெலிமாட்டிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் முன்னிலையில் அமெரிக்காவின் சிகாகோவில் கையெழுத்தானது.
- ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு அமெரிக்கா தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.
- இந்தோனேஷியாவின் பாலியில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் - ரஷ்யாவின் **Bogdan bobrob** இணை பட்டம் வென்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி, இன்று தஞ்சாவூர் - சோழபுரம் நான்குவழி தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை நேரில் ஆய்வு செய்கிறார்.

இன்று காலை திருச்சி வந்தடைந்த அமைச்சர், பிற்பகலில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<u>*( வாய்ஸ்பைட் - நந்தகோபால் ) ---41 செகண்ட்*</u>

**[]<<<>>>[]**

மின்சார பேருந்துகள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை என்றும், குறைந்த செலவில் இயங்கக்கூடியவை என்றும் மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் டி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

பிரதமரின் மின்சார பேருந்து சேவை திட்டம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 38 ஆயிரம் மின்சார பேருந்துகளை இயக்க அரசு முடிவு செய்துள்ளதாகக் கூறினார்,

இந்த திட்டத்தின் கீழ் மின்சார பேருந்துகளை வாங்கவும், அவற்றின் பராமரிப்புச் செலவுக்காகவும் மூவாயிரத்து 435 கோடி ரூபாயை ஒதுக்க மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளதாக திரு குமாரசாமி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யபப்பட்ட வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை தற்போது நடைபெற்று வருகிறது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 16-ஆம் தேதி கடைசி நாளாகும

இம்மாநிலத்தில் ஒரேகட்டமாக அடுத்த மாதம் ஐந்தாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதனிடையே ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவைக்கு மூன்றாவது மற்றும் இறுதிகட்ட தேர்தலுக்கு தாக்கல் செய்யபப்பட்ட வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனையும் தற்போது நடைபெற்று வருகிறது.

மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 17-ஆம் தேதி கடைசி நாளாகும்.

மூன்றாவது கட்டமாக 40 தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

தில்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்ட தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் வழங்கி உச்சநீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிபதிகள் திரு சூரியகாந்த், திரு உஜ்ஜல் புயன் அமர்வு இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

திரு கெஜ்ரிவால் உத்தரவாதத் தொகையாக பத்து லட்சம் ரூபாய் செலுத்த வேண்டுமென்றும், இந்த வழக்கு தொடர்பாக பொதுவெளியில் கருத்துக்களை தெரிவிக்கக்கூடாது என்றும் நீதிபதிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

ஏற்கனவே மத்திய அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்கில் ஜாமீன் வழங்கப்பட்ட நிலையில், சிபிஐ தொடர்ந்த வழக்கிலும் தற்போது திரு கெஜ்ரிவாலுக்கு ஜாமின் வழங்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ரஷ்யா சென்றுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல், சீனா வெளியுறவத்துறை அமைச்சர் திரு வாங்யீ-யை சந்தித்து பேசினார்.

செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் பிரிக்ஸ் நாடுகளின் பாதுகாப்பு ஆலோசகர்கள் நிலையிலான கூட்டத்திற்கு இடையே நடைபெற்ற இந்த சந்திப்பின் போது இந்தியா – சீனா இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் பேச்சு நடத்தினர்.

இரு நாட்டு உறவுகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை இரட்டிப்பாக்குவது என்று இந்த சந்திப்பின்போது முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையே பிரிக்ஸ் நாடுகளின் ஊடகவியலாளர்கள் பங்கேற்கும் மாநாடு ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் இன்று முதல் வரும் 17-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

அக்னி வீரர்களாக பணியாற்றியவர்களுக்கு மாநில சீருடை பணியாளர் தேர்வுகளில் பத்து சதவீதம் இடஒதுக்கீடு வழங்க ஒடிஸா அரசு முடிவு செய்துள்ளது.

அம்மாநில முதலமைச்சர் திரு மோகன்சரண் மாஜி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இற்கான முடிவு எடுக்கப்பட்டது.

சீருடை பணியாளர் தேர்வுக்கான வயது வரம்பில் அக்னி வீரர்களுக்கு மூன்று ஆண்டு கால தளர்வு வழங்கப்படும் என்றும், திறன் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்றும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தின் ஓசூரில் மின்னணு மற்றும் டெலிமாட்டிக்ஸ் உற்பத்தி நிறுவனத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் முன்னிலையில் அமெரிக்காவின் சிகாகோவில் கையெழுத்தானது.

ஆர் ஜி பி எஸ் ஐ நிறுவனம் 100 கோடி ரூபாய் முதலீட்டில் இதற்கான உற்பத்தியை தொடங்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சென்னையை அடுத்த அலமாதியில் செயல்பட்டு வரும் துணைமின் நிலையத்தில் நேற்று நேரிட்ட தீ விபத்து காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தடைபட்ட மின்விநியோகம் போர்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டதாக தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

தற்பாது மின் விநியோகம் சீராக நடைபெற்று வருவதாக அது கூறியுள்ளது.

மின் தடை காரணமாக பொதுமக்களுக்கு ஏற்பட்ட சிரமங்களை போக்க மாற்று வழியில் மின்சாரம் விநியோகத்தை மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாக மின்சார வாரியத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மின்தடை காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளில் அத்தியாவசிய சேவைகளுக்கு பாதிப்பு ஏதும் இல்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

அகில இந்திய மாங்கனி கண்காட்சி கிருஷ்ணகிரியில் இன்று தொடங்குகிறது.

28 நாட்களுக்கு நடைபெறும் இந்த கண்காட்சியில் அரசு மற்றும் தனியார் சார்பில் தலா 50 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ராஜா ) --- 28 செகண்ட்*

**[]<<<>>>[]**

க்வாட் அமைப்பின் தலைவர்கள் உச்சி மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திரமோடி பங்கேற்பதை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையின் செய்தி தொடர்பாளர் **Karine jean-pierre** செய்தியாளர்களிடம் பேசுகையில், க்வாட் நாடுகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த உச்சி மாநாடு நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்.

சுகாதாரம் மற்றும்  கடல்சார் பாதுகாப்பு, வானிலை மற்றும் பசுமை எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்த உச்சி மாநாட்டில் முடிவுகள் எட்டப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான் நாடுகள் பங்கேற்கும் இந்த மாநாடு இம்மாதம் 21-ஆம் **Delaware-**யில் நடைபெறவுள்ளது.

இதற்கிடையே ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு அமெரிக்கா தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஐ நா பாதுகாப்பு கவுன்சிலின் அமெரிக்க பிரதிநிதி லிண்டா தாமஸ் கிரீன்பீல்டு, இந்த விவகாரம் தொடர்பான வாக்கெடுப்பை நடத்தவும், இதர நாடுகளுடன் இது குறித்து பேச்சு நடத்தவும் அமெரிக்கா தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருட்களுடன் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த ஒருவரை பாதுகாப்புப் படையினர் நேற்று கைது செய்தனர்.,

சூரன்கோட் இணைப்புச் சாலையில் தேடுதல் நடவடிக்கையின்போது சந்தேகத்திற்குரிய வகையில் அந்த நபரின் நடமாட்டம் இருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து அந்த நபர் கைது செய்யப்பட்டதாகவும் பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

அவருடன் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.,

**[]<<<>>>[]**

உலக ஓசோன் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் சார்பில் புதுதில்லி பாரத் மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ராஜஸ்தான் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் பெய்த கனமழை காரணமாக, அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**Dholpur, Dausa, Bharatpur** உள்ளிட்ட 35 இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்துள்ளது.

49 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ராஜஸ்தானில் மிக கனமழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

இன்தோனேஷியாவின் பாலியில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சாய் கார்த்திக் - ரஷ்யாவின் **Bogdan bobrow** இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-4 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் மாத்யூ - அமெரிக்காவின் ஜாக்கூப் இணையை வென்றது.

**[]<<<>>>[]**

ஹங்கேரி புடாபெஸ்டில் நடைபெற்று வரும் செஸ் ஒலிம்பியாட் போட்டியின் இரண்டாவது சுற்றில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

[]<<<>>>[]

ஐ எஸ் கால்பந்து போட்டி இன்று தொடங்குகிறது,

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள முதல் ஆட்டத்தில் மோகன் பெஹான் அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.,

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]